# திருவருகைக்கால இரண்டாம் ஞாயிறு - முதல் ஆண்டு

**(07.12.25)**

பனிப்பொழிவு அதிகமான ஒரு காலைப் பொழுதில், கிராமப்புறச் சாலை ஒன்றில் வாகனம் ஓட்டிச் சென்ற பயணி வழி கேட்பதற்காக ஒரு பண்ணை வீட்டின் அருகில் சென்று நின்றார். அப்பொழுது, ஒரு குழந்தை வெளியில் வந்து நீங்கள் வர வேண்டிய இடத்திற்கு அருகில் வந்து விட்டீர்கள் என்று கூறி, அடி வானத்தை சுட்டிக்காட்டி, சாலை ஒரு வளைவில் திரும்பும், திரும்பியதும் அங்கு ஒரு அழகிய காட்சி தெரியும் என்றது.
ஆர்வத்துடன் பயணி வண்டியை ஓட்டி சென்றார். என்ன ஆச்சரியம்! அங்கிருந்த மூடுபனி முழுவதும் நீங்கிய, ஒளிமயமான அதிசயப் பள்ளத்தாக்கு ஒன்று அவர் கண் முன் பரந்து விரிந்து இருந்தது.

இறையரசு அண்மையில் உள்ளது. இது நாம் நம்ப முடியாத ஒரு கற்பனைக் கதை அல்ல. மாறாக, கிறிஸ்து பிறப்பின் உண்மைப் பொருளை உணர்ந்து, நாம் விழித்து எழுவதற்கு அழைப்பு விடுக்கின்ற ஒரு நல்ல காலம் - இந்த திருவருகைக் காலம்.

ஆம்! அன்பு இறை மக்களே! இன்றையதிருப்பலியின் மூன்று வாசகங்களும் நமக்கு இதைத்தான் உணர்த்துகின்றன. அவை வளைவுக்கு அப்பால் உள்ள ஒரு உலகத்தின் காட்சியைக் காட்டுகின்றன.

இறைவாக்கினர் ஏசாயா கூறுவது போன்று: அந்நாளில் செம்மறியோடு ஓநாய் தங்கி இருக்கும், வெள்ளாட்டுக் குட்டியோடு சிறுத்தைப் புலி படுத்து உறங்கும், கன்றும் சிங்கமும் ஒன்றாய் மேயும், சிறுபிள்ளை ஒன்று அவற்றை நடத்தும். பசுவும் கரடியும் கூடி மேயும், பசுவின் கன்றும் கரடிக் குட்டியும் ஒன்றாய் களைப்பாறும். பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பில் வலையில் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் வலையில் தன் கையை விடும். எதிரிகள் ஒருவரை ஒருவர் அணைத்துக் கட்டித் தழுவி சமாதானம் செய்துகொண்டு நண்பர்களாகும் உலகம்.

இது ஒரு கட்டுக்கதை போல் தெரியலாம். இவை ஏசாயா இறைவாக்கினர் வழியாக கடவுள் நமக்குக் கொடுத்த வாக்குறுதிகள். எனவே இவை வாக்கு மாறாத தேவனின் வார்த்தைகள்.

இயேசுவின் முன்னோடியான திருமுழுக்கு யோவான் இயேசுவின் வருகைக்காக இன்று அந்த சாலை வளைவில் நின்று கொண்டு "விழித்தெழுங்கள், மனம் மாறுங்கள்" என்ற அழைப்பை நமக்கும் விடுக்கின்றார். நாம் பாதையை மாற்றினால் மூடுபனி நீங்கும் இறையரசு ஏற்கனவே நம்மிடையே வந்து விட்டது என உணர்த்தும்.

எனவே இந்த தெய்வீகத் திருப்பதியில் பங்குபெறும் நாம், நம் உள்ளங்களை ஒளியாம் இறைவன்பால் திருப்பி, அவருடைய வருகைக்கு நம்மையே தயாரிக்க நாம் மறந்த நேரங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்போம்:

**மறையுரை:**

மனம் மாறுங்கள் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளுங்கள் ஏனென்றால் கடவுளின் அரசு ஏற்கனவே நம் நடுவில் உள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நகர மேயர் ஒரு அமைதி சுற்றுலா ஏற்பாடு செய்தார். போட்டியாளர்களான வணிக உரிமையாளர்கள், பிரிந்து போய் இருந்த குடும்பங்கள், சண்டை சச்சரவோடு பேச்சு வார்த்தை இன்றி இருந்தவர்கள், என அனைவரையும் அழைத்தார். அருகில் உள்ள பூங்காவில் அவர்கள் அனைவருக்கும் உணவு ஏற்பாடு செய்திருந்தார்.

அவர்களில் இரண்டு அண்டை வீட்டார் சொத்து தகராறில் உள்ளவர்கள். அவர்கள் வந்து அமைதியாக தனித்தனியே அமர்ந்தனர். அவர்களின் குழந்தைகளில் ஒருவர் மற்றொருவருக்கு பூங்கொத்து வழங்கும் வரை அப்படியே தனித்தனியே அமர்ந்திருந்தனர். இந்த எளிய செயல் பகைமையால் கல்லாகிப் போயிருந்த அவர்களது இதயத்தை மென்மையாக்கியது. அந்த நாளின் முடிவில் அவர்கள் சிரித்த முகத்துடன் ஒருவரோடு ஒருவர் கைகுலுக்கி புன்னகை பூத்த முகத்துடன் சமாதானமாக வீடு திரும்பினர்.

இது ஒரு புனையப்பட்ட கற்பனைக் கதையாக ஒருவேளை இருக்கலாம். ஆனால் ஏசாயா இறைவாக்கினர் சொல்வார்:

அந்நாளில் செம்மறியோடு ஓநாய் தங்கி இருக்கும், வெள்ளாட்டுக் குட்டியோடு சிறுத்தைப் புலி படுத்து உறங்கும், கன்றும் சிங்கமும் ஒன்றாய் மேயும், சிறுபிள்ளை

ஒன்று அவற்றை நடத்தும். பசுவும் கரடியும் கூடி மேயும், பசுவின் கன்றும் கரடிக் குட்டியும் ஒன்றாய் களைப்பாறும். பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பில் வலையில் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் வலையில் தன் கையை விடும்.

ஏசாயாவின் கனவு சாத்தியமற்றதாக தெரிகிறது. இருப்பினும் கிறிஸ்து இயேசுவை நாம் உண்மையிலேயே நம்மில் வரவேற்கும் போதெல்லாம் சாத்தியமற்ற செயல்கள் அனைத்தும் வடிவம் பெறத் தொடங்குகின்றன.

**மனம் திரும்புதல்  இறையரசில் நுழைவதற்கான வாயில்**

அக்காலத்தில் திருமுழுக்கு யோவான் யூதேயாவின் பாலை நிலத்துக்கு வந்து, “மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி விட்டது” என்று பறை சாற்றினார். அவருடைய இந்த செய்தி நம்மை அச்சுறுத்துவதற்காக அல்ல, மாறாக நாம் விழிப்பாய் இருப்பதற்கான எச்சரிக்கைக் குரல்.

மனம் திரும்புதல் என்பது தண்டனை என்று. அது விடுதலை நான் நல்லவனாக இருக்க கடினமாக முயற்சி செய்வேன் என்பதல்ல அது ஆண்டவரே ஆண்டவரே என்னை நானே மாற்றிக்கொள்ள முடியாது நீர்தான் என்னை மாற்ற வேண்டும் நான் பொதுப்படைப்பாக மாறிட நீர் என்னை மாற்ற வேண்டும்.

ஒருமுறை குருவானவர் ஒருவர் நடந்த ஒரு உண்மை சம்பவத்தை கூறினார் சகோதரியை மன்னிக்க முடியாது என்று ஒப்புக்கொண்ட ஒரு பெண்ணின் கதையைச்

சொன்னார் நான் என் சகோதரியை மன்னிப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டேன் ஆனால் என்னால் முடியவில்லை என்று அவர் சொன்னால் என்னால் முடியவே முடியாது என்றால் அப்போது குருவானவர் அப்படியானால் உங்கள் சகோதரியையும் மன்னிப்பதை நிறுத்துங்கள் அதற்கு பதிலாக உங்கள் மூலம் அவளை நேசிக்கும் படி இயேசுவிடம் கேளுங்கள் என்று கூறினார்.

என்னால் இதை அதைச் செய்ய முடியும் என அவள் மெல்லிய குரலில் குரு ஆனவரிடம் கூறிய போது அவள் கண்களில் கண்ணீர் வடிந்தது.

அதுதான் மன மாற்றம் தவறை தவறு என்று சொல்லும் துணிவு நியாயத்தை பாதுகாக்க தன்னலம் பாராமல் செயல்படும் வலிமை இவற்றைப் பெற இறை இறக்கம் நமக்கு தேவை இறைவனை நெருங்கி செல்லும்போது அவரை சரணடையும்போது இவை நமக்கு சாத்தியமே.

மன மாற்றம் நடைமுறையில் தெரியும் மனமாற்றம் என்பது சிறிய அதேசமயம் உறுதியான செயல்களிலும் வெளிப்படுகிறது. பத்திரிகையாளர் ஒருவர் ஒரு புள்ளிவிவரத்தை குறிப்பிட்டார் அதாவது ஒவ்வொரு ஜெர்மனியனும் உலக மக்களுக்கு உதவி செய்வதற்காக மாதத்திற்கு 19 சென்ட் காசுகள் மட்டுமே கொடுத்தால் போதும் மில்லியன் கணக்கான மக்களை வறுமையில் இருந்து மீட்க முடியும் என்று திட்டவட்டமாக கூறினார் சிறிய

சிறிய செயல்களை அதிகமாக செய்தால் உலகை மாற்ற முடியும் என்றும் கூறினார்.

மன மாற்றம் என்பதும் அப்படித்தான் அதாவது பிறரை பற்றி தவறாக பேசாதிருந்து வாகனம் ஓட்டுவதற்கு பதிலாக நடப்பது உடன்பிறந்தவர்களுடன் சமாதானமாக இருப்பது ஒரு நாளில் ஒரு மணி நேரமாவது தன்னார்வத் தொண்டு செய்வது அருகில் இருப்பவர்களை பார்த்து புன்முறுவல் கொள்வது உதவி செய்தவர்களுக்கு எப்போதும் நன்றி கூறி கடிதம் எழுதும் பண்பு இவை அனைத்துமே மனம் மாறுதல்.

ஏசாயா தீர்க்கதரிசியின் முன்னறிவிப்போடு ஒப்பிடும்போது இவை சிறியதாக தோன்றலாம் ஆனால் இறையரசு உள்ளூரிலும் நம் தனிப்பட்ட வாழ்விலும் இப்படித்தான் வளர்கிறது. மனம் மாறியவர்கள் என்பதை செயல்களால் காட்டுங்கள் ஏற்கனவே மரங்களின் பேரருகே கோடாரை வாய்த்தாயிற்று நற்கனி தராத மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு தீயில் போடப்படும். எனவே மனம் மாறியவர்கள் என்பதை உங்கள் நற்செயல்களால் காட்டுங்கள்.

என் வாழ்க்கையில் தூய ஆவியாரின் எந்த கனிகள் மலர்கின்றன? நம்மை நாமே பார்த்து தெரிந்து கொள்ள தூய பவுல் ஒரு எளிய கண்ணாடியை வழங்குகிறார். தூய ஆவியின் கனியோ அன்பு, மகிழ்ச்சி அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம் நம்பிக்கை கனிவு, தன்னடக்கம் என்பவை ஆகும். ஆனால் நம் நாட்களை ஊனியல்பின் செயல்களான

பொறாமை கோபம் சண்டை, சச்சரவு பிரிவினை பிளவு, கட்சி மனப்பான்மை ஆகியவை ஆட்கொள்ளும் எனில் எங்கோ ஏதோ தவறாக இருக்கின்றது என்பது பொருள்.

ஒரு மூதாதையர் சொன்னார் நீ உண்மையில் தூய்மையான வாழ்க்கையில் வளர்கிறாயா என்பதை அறிய வேண்டுமானால் உன் குடும்பத்தாரிடம் கேள் அவர்கள் உங்களிடம் உள்ள கனிகளை பார்க்கின்றார்கள் அதே அளவுகோல் நாம் வாழும் பங்குத்தளங்களுக்கும் நாடுகளுக்கும் கூட பொருந்தும். நாம் அமைதியின் கனிகளை கொடுக்கிறோமோ அல்லது பிரிவின் கனிகளை கொடுக்கிறோமா சற்று சிந்தித்துப் பார்ப்போம் கிறிஸ்து ஆட்சி செய்கின்ற இடத்தில் அமைதி மலரும்.

VI. கிறிஸ்துவை போல் ஒருவரை ஒருவர் வரவேற்போம்:

புனித பவுல் உரோமை மக்களிடம் சொன்னார் : கிறிஸ்து உங்களை வரவேற்றது போல நீங்கள் ஒருவரை ஒருவர் வரவேற்பீர்கள் ரோமை சபை யாரிடம் உணவு சட்டங்கள் மற்றும் பழக்க வழக்கங்களில் பல பிளவுகள் இருந்தன இன்று நம் வழிபாட்டு முறை, அரசியல் தனிப்பட்ட வாழ்வு - இவற்றில் நாமும் பிளவுபட்டு தான் காணப்படுகிறோம் ஆனால் கட்டளை மாறவில்லை கிறிஸ்து அவர்களை தன் மக்களாக ஏற்கனவே ஏற்றுக் கொண்டுள்ளார்.

துறவிகள் வாழும் ஒரு மடத்தில் நடந்த ஒரு அழகிய கதை: ஒரு வனத்தில் இருந்த இரு துறவிகள் ஆள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ முடியவில்லை இதைக் கண்ட

மடத்தின் அதிபதி அவர்களிடம் சொன்னார் இன்று இரவு நீங்கள் இருவரும் ஒருவரின் கால்களை மற்றவர் கழுவ வேண்டும் இது மிகவும் புதுமையான செயலாக இருந்தது இருப்பினும் அவர்கள் அமைதியாக அதைச் செய்தனர் ஆனால் அவர்களது உள்ளத்தில் ஏதோ ஒரு மாற்றம் காணப்பட்டது மறுநாள் காலையில் ஜெப வேளையில் அவர்கள் இருவரும் அருகருகே நின்று ஜெபித்துக் கொண்டிருந்தனர்.

எதிரிகளாக அல்ல மனம் திரும்புதல் வழியாக மனம் திரும்புதல் என்ற நற்காரியம் எப்போதும் ஒற்றுமையில் தான் முடியும் இது இப்படியாக தொடங்குகிறது. நான் உன்னுடன் ஒத்துப் போகவில்லை என்றாலும் இயேசு கிறிஸ்து உன்னை வரவேற்றுள்ளார்.

VII. கற்பனை கதை அல்ல உண்மையான அழைப்பு :

ஏசாயாவின் தீர்க்க தரிசனம் நம்பிக்கையில் முடிகிறது என் பரிசுத்த மழை முழுவதும் அவர்கள் தீங்கு செய்ய மாட்டார்கள் அதை அழிக்கவும் மாட்டார்கள் ஏனெனில் பூமி கடவுளைப் பற்றிய அறிவால் நிறைந்திருக்கும். அது கடவுளைப் பற்றிய அறிவு அல்ல கடவுளையும் அவரால் படைக்கப்பட்ட ஒவ்வொருவரையும் நேசிப்பதன் மூலம் வரும் புரிதல் ஆகும்.

அது முதலில் சிறியதாய் தொடங்குகிறது உன் வீட்டில் உன் வேலையில் உன் பங்குத் தளத்தில் உன் இதயத்தில் அது தொடங்குகின்றது.

இரண்டாம் உலகப் போரின் போது அன்றே என்ற பிரெஞ்சு விவசாயி தனது உயிரை பணயம் வைத்து யூதக் குடும்பங்களை ஜெர்மனிய நாச்சிகளிடமிருந்து அவர்களை மறைத்து வைத்து காப்பாற்றினார். ஏன் அவர்களை காப்பாற்றினீர் என்று கேட்டபோது அவர் கூறினார் : ஏனென்றால் நான் ஒவ்வொரு நாளும் திரு விவிலியத்தை படித்தேன் கடவுளின் அரசு வருகிறது என்றால் அது ஏற்கனவே இங்கே நம்மிடையே இருப்பது போல நாம் வாழ வேண்டும் என்பதை நான் புரிந்து கொண்டேன் என்று அந்திரே பதிலளித்தார்.

ஏசாயாவின் இந்த தீர்க்கதரிசன உரைகள் ஒரு கற்பனை கதை அல்ல இப்போதே விழித்தெழுந்து இறையரசின் குடிமக்களாக இறை மக்களாக வாழ இது ஒரு அழைப்பு. இது நமக்கு திருவருகை காலத்தில் கிடைத்திருக்கும் அழைப்பு.

இறை அரசு இன்னும் முழுமையாக வரவில்லை ஆனால் அது நமது உடன் இருப்பில் ஒவ்வொருவரின் புரிதலிலும் மனம் திரும்புதலிலும் ஒவ்வொருவரையும் அரவணைத்து வரவேற்றுக் கொள்வதில் ஒவ்வொருவரையும் மன்னிப்பதில் என பலவற்றிலும் அடங்கியுள்ளது அது முதலில் என்னுள் தொடங்கட்டும் உன்னுள் தொடங்கட்டும் பல வகையான பழக்க வழக்கங்கள் கொண்ட மக்கள் வாழும் இச்சமூகத்தில் தொடங்கட்டும் பகைவர்கள் நண்பர்களாக ஒன்றிணையும் இடங்களில் தொடங்கட்டும் யூதாவின் சிங்கம் நமது

உடைந்த ஆட்டுக்குட்டியுடன் படுத்து இருக்கும் இடத்திலும் இந்த பலிபீடத்திலும் தொடங்கட்டும். ஆமென்.

தமிழாக்கம் டாக்டர் ஹில்டா  கிரிஸ்டி, சென்னை

**பாவ மன்னிப்பு மன்றாட்டு:**

நம் பாவங்களை ஏற்றுக்கொண்டு இப் புனித திருச்சடங்கில் பங்கேற்க நம்மை நாமே தயார் செய்வோம்:

அன்பு இயேசுவே, விழித்து எழுந்து, புரிந்து கொண்டு, தவறான பாதையில் இருந்து விலகி, ஒளியாம் இறைவனிடம் அழைத்துச் செல்ல வந்த **ஆண்டவரே இரக்கமாயிரும்.**

கிறிஸ்து இயேசுவே, நீர் எங்களை உம் இறையாச்சிக்கு வரவேற்றது போல் நாங்களும் ஒருவரை ஒருவர் வரவேற்க விரும்பும் **கிறிஸ்துவே இரக்கமாயிரம்**

இனிய இயேசுவே, அமைதியிலிருந்து இந்த உலகம் வெகு தொலைவில் இருந்தாலும் நீர் எங்கள் அருகில் இருக்கிறீர் **ஆண்டவரே இரக்கமாயிரும்.**

அனைத்தையும் படைத்தாளு ம் அன்பு இறைவா! மனத்தாழ்ச்சியோடு உம்மை நாடிவரும் எங்களின் இரக்கமாயிரும். எங்கள் பாவங்களை எல்லாம் மன்னித்து, நாங்கள் எதிர்நோக்கி இருக்கும் இறை அரசில் எந்நாளும் உம்மோடு ஒன்றித்திருக்கும் வரம் அருள எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

சபை மன்றாட்டு: அனைத்தையும் படைத்தாளு ம் இரக்கமிகு இறைவா!

உம் வருகைக்கு எங்களை தயார் செய்ய ஏசாயா எரேமியா தானியேல் போன்ற இறைவாக்கினர்களை தேர்ந்தெடுத்து அனுப்பினீரே. எங்கள் இதயங்களையும் பிறருக்கு நன்மை செய்ய தூண்டி எழுப்புவீராக.

மனம் திரும்புதலின் அருளால் உங்கள் பாதைகளை செம்மைப்படுத்தவும் நெறிப்படுத்தவும் ஒற்றுமையிலும் அன்பிலும் நிலைத்திருந்து கனி கொடுக்கவும் கிறிஸ்து எங்களை ஏற்றுக்கொண்டு வரவேற்றது போல் ஒருவரை ஒருவர் நாங்கள் வரவேற்கவும் மரம் அருள எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம் ஆமென்.

நம்பிக்கை அறிக்கைக்கு அழைப்பு:

இறையரசின் வருகைக்காக நாம் காத்திருப்பது என்பது ஒரு தொலைதூர கனவாக அல்ல. மாறாக மாற்றத்திற்கான ஒரு நிகழ்கால அழைப்பாக மனநிறைவிலிருந்து எழுபம்பு கின்றது. நம்

வேறுபாடுகளை கடந்து நம்மை ஒன்றிணைக்கும்,ஏற்கனவே நாம் அருகில் இருப்பவர்களின் மேலும் நம் நம்பிக்கையை பலப்படுத்தும்.

காணிக்கை மன்றாட்டுக்கு அழைப்பு :

இந்த திருவருகை காலத்தில் பிறக்கவிருக்கும் பாலன் இயேசுவுக்கு நாம் கொடுக்கவிருக்கும் பரிசுகளும் நமது மனம் திருந்திய வாழ்வும் அன்பினால் ஒருவர் ஒருவரை நாம் தாங்கவும் நாம் வேண்டிக் கொள்ளும் இவை அனைத்தும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உகந்ததாக இருக்க வேண்டும் என்று ஜெபியுங்கள்.